# கலாத்தியர் அறிமுகம்

Rev Peter Evensen, CLC USA

## ஆசிரியர்

இந்த நிருபத்தின் ஆரம்பத்திலேயே தம்மை இந்த நிருபத்தின் ஆசிரியராக அறிமுகம் செய்துகொள்கிறார்

> **காலத் 1:1** "மனுஷராலுமல்ல, மனுஷன் முலமாயுமல்ல, இயேசுகிறிஸ்துவினாலும் அவரை மரித்தோரிலிருந்தெழுப்பின பிதாவாகிய தேவனாலும், அப்போஸ்தலனாயிருக்கிற பவுலாகிய நானும்"

## பெற்று கொள்பவர்கள்

பெற்று கொள்பவர்கள் :- இரண்டாம் வசனத்தில் யாருக்கு இந்த நிருபம் எழுதப்படுகிறது என்று பவுல் சொல்கிறார் (வசனம் 2) "காலத்திய நாட்டில் உள்ள சபைகளுக்கு எழுதுகிரதவது" இந்த நிருபத்தின் விசேஷம் என்னவென்றால் சரியாக ஒரு சபைக்கு உட்பட்டதாய் இராமல் ரோமசாம்ராஜிய எல்லைக்குட்பட்ட கலாத்திய மாவட்டத்தில் உள்ள எல்லா சபை சமூகத்திற்கும் இந்த நிருபம் எழுதப்பட்டது.

காலத்திய என்பது வடக்கு மையத்தில் உள்ள ஆசியா சிறிய கண்டத்தில் உள்ள இந்த பூகோல பாகத்திற்கு கொடுக்கப்பட்ட பெயர் இங்கே வசிக்கும் கலாத்தியர்கள் முதலில் பிரான்சிலிருந்து வந்து குடியேரினவர்கள். இந்த பிரதேசம் பிறகு ரோமர்கள் கட்டுப்பாட்டில் வந்த பின்பு அங்கே வசித்த பிரஜைகளின் படி இதற்கு கலாத்தியா என்ற பெயர் 25கி.பி.யில் மாற்றப்பட்டது. இந்த கலாதியாவினுடைய ரோமர்களின் ஆளுகைக்கு உட்பட்ட எல்லைகளை நாம் கவனித்து பார்த்தல் இந்த கலாத்திய அனேக சரியாக கலாத்தியர்கள் மாத்திரமே வசிக்கும் பிரதேசமாக இல்லாமல் அதற்கு மேலும் கொஞ்சதெற்கு பிரதேசங்களான பிசிதியா, இசூரியா, லோகோனியா மற்றும் கிழக்கு பிரிகிரியாலோ ஒரு பாகம் சேர்ந்து கலாத்தியா என்று அழைத்தார்கள்.

பவுல் தனிப்பட்ட முறையில் இந்த சபைகளை எல்லாம் பர்வையிட்டார்:

> **காலத் 1:8-9** "நாங்கள் உங்களுக்குப் பிரசிங்கித்த சுவிசேஷத்தையல்லாமல், நாங்களாவது வானத்திலிருந்து வருகிற ஒரு தூதனாவது, வேறொரு சுவிசேஷத்தை உங்களுக்குப் பிரசங்கித்தால் அவன் சபிக்கப்பட்டவனாயிருக்கக்கடவன். முன் சொன்னது போல் மறுபடியும் சொல்லுகிறேன்; நீங்கள் ஏற்றுக்கொண்ட சுவிசேஷத்தையல்லாமல் வேறொரு சுவிசேஷத்தை ஒருவன் உங்களுக்குப் பிரசிங்கிதால் அவன் சபிக்கப்பட்டவனாயிருக்ககடவன்."
>
> **காலத் 4:13-15** "உங்களுக்கு தெரிந்திருக்கிறபடி, நான் சரீர பலவீனத்தோடு முதலாந்தரம் உங்களுக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தேன். அப்படியிருந்தும் என் சரீரத்திலுண்டாயிருக்கிற சோதனையை நீங்கள் அசட்டைபண்ணாமலும், அரோசியாமலும், தேவதூதனைப்போலவும், கிறிஸ்து இயேசுவைப்போலவும், என்னை ஏற்றுக்கொண்டீர்கள். அப்பொழுது நீங்கள் கொண்டிருந்த ஆனந்த பாக்கியம் எங்கே? உங்கள் கண்களைப் பிடுங்கி எனக்குக் கொடுக்கக்கூடுமானால், அப்படியும் செய்திருப்பீர்களென்று உங்களுக்குச் சாட்சியாயிருக்கிறேன்."

மற்றும் பவுல் இந்த நிரூபத்தை எழுதுவதற்கு முன்பே சரியாக அதே காலத்தில் இந்த சபைகளை பார்வையிட்டார்.

> **காலத் 1:6** "உங்களைக் கிறிஸ்துவின் கிருபையினாலே அழைத்தவரை நீங்கள் இவ்வளவு சீக்கிரமாய் விட்டு, வேறொரு சுவிசேஷத்திற்குத் திரும்புகிறதைப்பற்றி நான் ஆச்சரியப்படுகிறேன்;"

அப்போஸ்தளனாகிய பவுல் தன்னுடைய முதல் மிஷனரி ஊழிய பயணத்தில் தெற்கு கலாத்தியா நகரமான அந்தியோக்கிய, இக்கோனியா, லீஸ்தரா, தெர்பைக்கு இரண்டு முறை சென்றதாக அப்போஸ்தலர் நடபடிகள் தெரியப்படுதுகிறது. (அப்போ 13 & 14) மறுபடியும் தன்னுடைய இரண்டாவது மிஷனரி ஊழிய பிரயாணத்தில் ஆரம்பத்தில் கூட இந்த சபைகளை பார்வையிட்டதாக அப்போஸ்தலர் 15:41, 16:5 நாம் பார்க்கலாம்

## சந்தர்பம் மற்றும் உத்தேஷம்

பவுல் கலாத்திய சபைகளை பார்வையிட்டு விட்டு சென்ற பின்பு வேறு சில மற்ற போதகர்கள் இந்த சபைகளுக்கு வந்து சபைகளுக்கு தேவையான எல்லா காரியங்களையும் பவுல் அவர்களுக்கு போதிக்கவில்லையென்று கொஞ்சம் மிக முக்கியமான காரியங்களை பவுல் அவர்களுக்கு சொல்லவில்லையென்று போதிக்கவில்லையென்று போதித்தார்கள் சுவிசேஷம் மாத்திரமே இல்லாமல் நியாயப்பிரமான விதிகளை கூட கடை பிடிக்க வேண்டும் என்று கலாத்தியா சபைகளில் போதித்த அந்த போதகர்களே யூத கிறிஸ்துவ மத போதகர்கள் சரியாக மரித்து உயிரோடு எழுந்த இயேசுவின் மேல் விசுவாசம் வைத்தால் போதாது, மோசேயினுடைய நியாயப்பிரமாண கட்டளைகளை கூட அநுசரிக்க

வேண்டும் என்று அவர்கள் போதித்தார்கள். அது மாத்திரம் அல்ல பவுல் உண்மையான அப்போஸ்தலர் அல்ல ஒரு உண்மையான  கிறிஸ்துவ மத போதகர் அல்ல என்று சொன்னார்கள் காரணம் இயேசு தன்னுடைய பூலோக ஊழியங்களின் காலத்தில் பவுல் அப்போஸ்தலனாக இயேசுவின் மூலம் அழைக்கப்படவில்லையென்று அவர்கள் கலாத்தியவிலுள்ள சபைகளில்  பிரசங்கித்தார்கள்.

பவுல் தன்னை உண்மையான அப்போஸ்தலன் என்று நிரூபித்துக் கொள்வதற்கு இந்த நிருபத்தை மிக அவசரமாக எழுதவேண்டியது வந்தது. அது மாத்திரம் அல்லாமல் உண்மையான கிருபையினுடைய சுவிசேஷத்தை காப்பாற்றுவதற்கு கூட பவுல் இந்த நிருபத்தை எழுத வேண்டியது அவசியமாயிருக்கிறது.மேற்சொன்ன காரணங்களினால் இந்த நிருபத்தில் பவுல் கிரியைகளின் மூலமாக இல்லாமல் சரியாக கிருபையின் மூலமாக மாத்திரமே நாம் நீதிமான்களாக்கப்படுகின்றோம் என்று தெளிவாக பிரகடனப்படுத்தினார்.

## எழுதப்பட்ட காலம் மற்றும் சந்தர்ப்பம்

அப்போஸ்தலர் நடபடிகள் 15ம் அதிகாரத்தில் தெளிவாக சொல்லப்பட்டிருக்கிறபடியே எருசலேம் அப்போஸ்தல மகா சபை நடப்பதற்கு முன்பு இந்த நிருபத்தை பக்தனாகிய பவுல் எழுதியிருக்க வேண்டும் காரணம் என்னவென்றால் எருசேலம் அப்போஸ்தல மகா சபையில் கிறிஸ்துவ விசுவாசிகள் நியாயப் பிரமானத்தை கடைபிடிக்க வேண்டுமா வேண்டாமா என்பதைக் குறித்து இந்த சபையில் மிகத் தீவிரமாக விவாதிக்கப்பட்டு கிறிஸ்துவ விசுவாசிகள் நியாயப்பிரமாண கட்டளைகளை கடைபிடிக்க வேண்டியது அவசியம் இல்லையென்று இந்த மகா சபையில் தீர்மானம் செய்யப்பட்டது. ஒரு வேளை இந்த நிருபத்தை எருசலேம் அப்போஸ்தல மகாசபைக்கு பின்பு எழுதப்பட்டிருந்தால் அந்த மகா சபையினுடைய தீர்மான விவரங்களை பவுல் அவசியமாக இந்த நிருபத்தில் குறிப்பிட்டிருந்திருப்பார்.

கலாத் 4:20 “உங்களைக்குறித்து நான் சந்தேகப்படுகிறபடியா, நான் இப்பொழுது உங்களிடத்தில் வந்திருந்து வேறு வகையாகப் பேச விரும்புகிறேன். இவ்வசனத்தின் படி பார்த்தால் கலாத்தியவிற்கு மிக தூரத்தில் இருந்து இந்த நிருபத்தை எழுதியிருக்கின்றர். அப்போஸ்தலர் 15:2 ன் படி பவுல் இந்நேரத்தில் எருசலேம் மகா சபைக்கு சென்றுவிட்டு திரும்பும் வழியில் இருக்கின்றார். மறுபடியும் திரும்பிச்சென்று அவர்களை பார்ப்பதற்கு பதிலாக இந்த மிக அவசரமான நிரூபத்தை எழுதி அவர்களுக்கு அனுப்பினார்.

பவுல் தன்னுடைய 2வது மிஷனரி ஊழியத்தில் மறுபடியுமாக இச்சபைகளை பார்வையிட்டார். அவருடைய இந்த பார்வையிடுதலின் போதே எருசலேம் மகா சபையினுடைய தீர்மான விவரங்களை அதனுடைய முடிவுகளை சொன்னார்.

பவுல் எருசலேம் மார்க்க வழியாக இந்த நிருபத்தை எழுதிக்கொண்டிருந்தார் ஆகவே மற்ற சபைகளிளுடைய வாழ்த்துக்களைச் தெரியப்படுத்தவில்லை. சாதாரணமாக பவுல் தன்னுடைய நிருபங்களில் மற்ற சபைகளிளுடைய வாழ்த்துதல்களை அறிவிப்பார். இதற்கு பதிலாக 1ம் அதிகாரம் 2ம் வசனத்தில் இவ்வாறு சொல்கிறார். “என்னுடனேகூட இருக்கிற சகோதரரெல்லாரும், கலாத்தியா நாட்டிலுள்ள சபைகளுக்கு எழுதுகிறதாவது தன்னுடன் சுட எருசலேம்.

மகா சபையில் கலந்துக்கொல்வதற்கு பிரயாணம் செய்து கொண்டிருந்த சகக்கூட்டாளிகள் இங்கே எழுதி இருக்கின்றார். இக்காரியங்களுக்கு ஆதாரம் பார்த்தல் அப்போ 15ல் எழுதப்பட்ட விதமாக தன்னுடைய முதல் மிஷனரி உழிய பிரயானத்திற்கு பின்பு கொஞ்ச காலத்திற்குப் பின்பு  அவர் எருசலேமை மூன்றாவது முறையாக தரிசித்த நேரத்தில் இதை எழுதினர் ஆகஸ்ட் 49ல் இந்த நிரூபத்தை எழுதி இருக்க கூடும். கலாத்தியருக்கு இந்த நிருபம் பவுலினுடைய முதல் நிருபமாக கருதப்படுகிறது.

## நிரூபத்தின் உள்ளே அடங்கி உள்ள பொருளடக்கம்

பவுல் கலாத்தியருக்கு எழுதின இந்த நிருபத்தை மூன்று முக்கிய பாகங்களாக பிரிக்கலாம்.

1. முதல் பாகத்தில்: முதல் இரண்டு அதிகாரங்களில் தன்னுடைய அப்போஸ்தலத்துவத்தைக் காப்பற்றி கொள்வதற்காக எழுதியிறுக்கிறார். மீதி 11அப்போஸ்தலர்கள் போல பவுல் உண்மையான அப்போஸ்தலர் அல்ல காரணம் இவர் ஏசுவை பார்க்கவில்லை மற்றும் ஏசுவினால் அப்போஸ்தலனாய் அழைக்கப்படவில்லை என்று யூத மத மார்க்க  போதகர்கள் காலத்திய விசுவாசிகளுக்கு போதிக்கிரவர் களாய் இருந்தார்கள் ஆகவே அதற்க்கு சமாதானமாக இவ்விதமாக எழுதுகின்றார்.

**கலாத் 1:1** “மனுஷராலுமல்ல, மனுஷன் மூலமாயுமல்ல, இயேசுகிருஸ்துவினாலும், அவரை மரித்தோரிலிருந்துதெழுப்பின பிதாவாகிய தேவனாலும், அப்போஸ்தலனாயிருக்கிற பவுலாகிய நானும்.”

**கலாத் 1:11-12** “மேலும், சகோதரரே, என்னால் பிரசங்கிக்கப்பட்ட சுவிசேஷம் மனுஷருடைய யோசனையின்படியானதல்லவென்று உங்களுக்குத் தெரிவிக்கிறேன். நான் அதை ஒரு மனுஷனால் பெற்றதுமில்லை, மனுஷனால் கற்றதுமில்லை, இயேசுகிறிஸ்துவே அதை எனக்கு வெளிப்படுத்தினார்.”

**கலாத் 1:15-16** “அப்படியிருந்தும், நான் என் தாயின் வயிற்றிலிருந்தது முதல், என்னைப்

பிரித்தெடுத்து, தம்முடைய கிருபையினால் அழைத்த தேவன், தம்முடைய குமாரனை நான் புறஜாதிகளிடத்தில் சுவிசேஷமாய் அறிவிக்கும்பொருட்டாக, அவரை என்னக்குள் வெளிபடுத்தப் பிரியமாயிருந்தப்போது, உடனே நான் மாம்சதோடும் இரத்தத்தோடும் யோசனைபண்ணாமலும்;"

**கலாத் 2:6-9** "அல்லாமலும் எண்ணிக்கையுள்ளவர்களாயிருந்தவர்கள் எனக்கு ஒன்றும் போதிக்கவில்லை; அவர்கள் எப்படிப்பட்டவர்களாயிருந்தாலும் எனக்குக் கவலையில்லை, தேவன் மனுஷரிடத்தில் பட்சபாதமுள்ளவரல்லவே. அதுவுமல்லாமல் விருத்தசேதனமுள்ளவர்களுக்கு அப்போஸ்தலனாயிருக்கும்படி பேதுருவைப் பலப்படுதினவர் புறஜாதிகளுக்கு அப்போஸ்தலனாயிருக்கும்படி என்னையும் பலப்படுதினப்படியால், விருத்தச்சேதனமுள்ள அவர்களுக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி பேதுருவுக்குக் கையளிக்கப்பட்டதுபோல, விருத்தச்சேதனம் இல்லாதவர்களுக்குப் பிரசங்கிக்கும்படி அது எனக்கும் கையளிக்கப்பட்டதென்று அவர்கள் கண்டு; எனக்கு அளிக்கப்பட்ட கிருபையை அறிந்தபோது, தூண்களாக என்னப்பட யாக்கோபும், கேபாவும் யோவானும், தாங்கள் விருத்தச்சேதனமுள்ளவர்களுக்கும், நாங்கள் புறஜாதிகளுக்கும் பிரசங்கிக்கும்படி, அந்நியோந்நிய ஐக்கியத்திற்கு அடையாளமாக எனக்கும் பர்னபாஸ்வுக்கும் வலதுகைக் கொடுத்து,"

**கலாத் 2:11-14** "மேலும், பேதுரு அந்தியோகியவுக்கு வந்தபோது, அவன்மேல் குற்றஞ்சுமந்ததினால், நான் முகமுகமாய் அவனோடே எதிர்த்தேன். எப்படியெனில், யாக்கோபினிடத்திலிருந்து சிலர் வருகிறதற்குமுன் அவன் புறஜாதியாருடனே சாப்பிட்டான்; அவர்கள் வந்தபோதோ, விருத்தசேதனமுள்ளவர்களுக்குப் பயந்து, விலகிப் பிரிந்தான். மற்ற யூதரும் அவனுடனேகூட மாயம்பண்ணினார்கள்; அவர்களுடைய மாயத்தினாலே பர்னபாவும் இழுப்புண்டான். இப்படி அவர்கள் சுவிசேஷத்தின் சத்தியதிற்கேற்றபடி சரியாய் நடவாததை நான் கண்டபோது, எல்லாருக்கும் முன்பாக நான் பேதுருவை நோக்கிச்சொன்னது என்னவென்றால்; யூதனாயிருக்கிற நீர் யூதர் முறைமையாக நடவமால், புறஜாதியார் முறைமையாக நடந்துகொண்டிருக்க, புற ஜாதியாரை யூதர்முறைமையாக நடக்கும்படி நீர் எப்படிக்கட்டாயம் பண்ணலாம்?"

2. இரண்டாம் பாகம் என்றால் 2ம் அதிகாரம் கடைசியில் இருந்து 3மற்றும் 4 அதிகாரங்களில் நியாயப்பிரமாண கிரியைகளின் மூலமாய் இல்லாமல் விசுவாதினால் கிருபையின் முலமாக மாத்திரமே நீதிமான்களாக்கப் படுகின்றோம் என்ற உபதேசத்தை பிரதிவாதம் செய்துக் காப்பற்றினர்.

**கலாத் 2:15-16** "புறஜாதியாரில் பிறந்த பாவிகளாயிராமல், சுபாவத்தின்படி யூதராயிருக்கிற நாமும் இயேசுகிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்தினாலேயன்றி, நியாயப்பிரமானத்தின் கிரியைகளினாலே மனுஷன் நீதிமானாக்கப்படுவதில்லையென்று அறிந்து, நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலல்ல, கிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்தினாலே  நீதிமான்களாக்கப்படும்படிக்குக் கிறிஸ்து இயேவின்மேல் விசுவாசிகளானோம். நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலே எந்த மனுஷனும் நீதிமானாக்கப்படுவதில்லையே."

**கலாத் 3:22-25** "அப்படியிராதப்படியால், இயேசுகிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினாலே பலிக்கிற வாக்குத்தத்தம் விசுவாசமுள்ளவர்களுக்கு அளிக்கப்படும்படி வேதம் எல்லாரையும் ஏகமாய்ப் பாவத்தின்கீழ் அடைத்துப்போட்டது. ஆதலால் விசுவாசம் வருகிறதற்குமுன்னே, வெளிப்படப்போகிற விசுவாசத்திற்கு ஏதுவாக நாம் அடைக்கப்பட்டவர்களாய் நியாயப்பிரமாணத்தின்கீழ் காவல் பண்ணப்பட்டிருந்தோம். இவ்விதமாக, நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்படுவதற்கு நியாயப்பிரமாணம் நம்மைக் கிறிஸ்துவினிடத்தில் வழிநடத்துகிற உபாத்தியாய் இருந்தது. விசுவாசம் வந்தபின்பு நாம் உபாத்திக்கு கீழானவர்களல்லவே."

**கலாத் 4:4-7** "நாம் புத்திரசுவிகாரத்தையடையும்படி   நியாயப்பிரமாணத்திற்குக் கிழ்ப்பட்டவர்களை மீட்டுக்கொள்ளத்தக்கதாக, காலம் நிறைவேறினபோது, ஸ்திரீயினிடத்திற் பிறந்தவரும் நியாயப்பிரமாணத்திற்குக் கீழானவருமாகிய தம்முடைய குமாரனை தேவன் அனுப்பினார். மேலும் நீங்கள் புத்திரராயிருக்கிறப்படியினால், அப்பா, பிதாவே! என்று கூப்பிடத்தக்கதாக தேவன் தமது குமாரனுடைய ஆவியை உங்கள் இருதயங்களில் அனுப்பினார். ஆகையால் இனி நீ அடிமையாயிராமல் புத்திரனாயிருகிறாய்; நீ புத்திரனேயானால், கிறிஸ்துமூலமாய் தேவனுடைய சுதந்திரனயுமிருக்கிறாய்."

3. 3ம் பாகம் என்றல் 5 மற்றும் 6 அதிகாரங்களில் கிறிஸ்துவில் நமக்கு கொடுக்கப்படுகின்ற சுதந்திரத்தை பிரதிவாதத்தினால் காப்பாற்றுகிறார்.

**கலாத் 5:1** "ஆனபடியினாலே, நீங்கள் மறுபடியும் அடிமைத்தனத்தின் நுகத்துக்குட்படாமல், கிறிஸ்து நமக்கு உண்டாக்கின சுயாதீன நிலைமையிலே நிலைகொண்டிருங்கள்."

**கலாத் 5:13** "சகோதரரே, நீங்கள் சுயாதீனத்திற்கு அழைக்கப்பட்டிர்கள், இந்தச் சுயாதீனத்தை நீங்கள் மாம்சத்திற்க்கேதுவாக அநுசரியாமல், அன்பினாலே ஒருவருக்கொருவர் ஊழியஞ்செய்யுங்கள்."

இந்த நிருபத்தில் சபைகளில் உள்ள பலவீனமான சகோதரர்கள் மற்றும் தம்முடைய கெட்ட போதனையினால் அவர்களை வழி தவறப்பண்ணுகின்ற பொய்யான போதகர்களைக் குறித்து

விவரிக்கின்றனர். தப்பான போதனைக்கு கீழ்ப்பட்டு வழி தவறுகின்ற பலவீனமான சகோதரர்கள் விஷயமாக பவுல் எவ்வளவு பொறுமையாக இருந்து அவர்களை தம்முடைய தவறான போதனைகளினால் சத்தியத்தை குறைத்து அநேகரை வழி தவறப்பண்ணுகிறவர்களை நிராகரித்து அவர்கள் போதனையை சதிக்க கூடாமல் கீழ்க்கண்ட விதமாக கண்டிக்கின்றனர்.

**கலாத் 1:8-9** "நாங்கள் உங்களுக்குப் பிரசங்கித்த சுவிசேஷத்தையல்லாமல், நாங்களாவது, வானத்திலிருந்து வருகிற ஒரு தூதனாவது, வேறொரு சுவிசேஷத்தை உங்களுக்குப் பிரசங்கித்தால், அவன் சபிக்கப்பட்டவனாயிருக்கக்கடவன். முன் சொன்னதுபோல மறுபடியும் சொல்லுகிறேன்; நீங்கள் ஏற்றுக்கொண்ட சுவிசேஷத்தையல்லாமல் வேறெரு சுவிசேஷத்தை ஒருவன் உங்களுக்குப் பிரசங்கித்தால் அவன் சபிக்கப்பட்டவனாயிருக்கக்கடவன்."

**கலாத் 5:12** "உங்களைக் கலக்குகிறவர்கள் தறிப்புண்டுபோனால் நலமாயிருக்கும்."

**கலாத் 6:1-2** "சகோதரரே, ஒருவன் யாதொரு குற்றத்தில் அகப்பட்டால், ஆவிக்குரியவர்களாகிய நீங்கள் சாந்தமுள்ள ஆவியோடே அப்படிப்பட்டவனைச் சீர்பொருந்தப்பண்ணுங்கள்; நீயும் சோதிக்கப்படாதபடிக்கு உன்னைக்குறித்து எச்சரிக்கையாயிரு. ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து, அப்படியே கிறிஸ்துவினுடைய பிரமாணத்தை நிறைவேற்றுங்கள்."

## சுருக்க வர்ணனை

1. அறிமுகம் (1:1-5)
2. பவுல் தன்னுடைய அப்போஸ்தலத்துவத்தை காப்பாற்றிக்கொள்ளுதல (1:6-2:21)
3. விசுவாசத்தினால் கிருபையினால் மட்டுமே இரட்சிப்பு என்ற உபதேசம் காப்பாற்றப்படுதல் (3:1-4:31)
4. சுவிசேஷத்தில் கிறிஸ்தவ சுதந்திரம் காக்கப்படுவது (5:1-6:10)
5. முடிவான வார்த்தைகள் (6:11-18)